தமிழ் Tamil

# AMEP இல் கற்பவர்களுக்கான உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

## உங்கள் உரிமைகள்

உங்களுடைய AMEP வழங்குநராக நாங்கள் உங்களுக்கு கீழ்கண்டவற்றை வழங்குவோம்:

- நீங்கள் ஆஸ்திரேலியாவில் குடியமர உதவுவதற்கு உங்களுக்கு உயர்தரத்திலான ஆங்கில மொழிப் பயிற்சி, வழிகாட்டுதல் மற்றும் ஆதரவு.
- ஒரு பாதுகாப்பான மற்றும் ஆதரவான கற்கும் சூழல் மற்றும் தனித்திறன் பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த பணியாளர்கள்.
- உங்களுடைய கவலைகளையும் புகார்களையும் தீவிரமானதாகக் கருத்தில் கொண்டு, அவற்றுக்கு உடனடியாக பதிலளிக்கப்படும்.
- நீங்கள் நியாயமாகவும், மரியாதையுடனும் கலாச்சாரரீதியாக உணர்வுப்பூர்வமாகவும் நடத்தப்படுவீர்கள்.
- உங்களுடைய தேவைகள், திறன்கள், குறிக்கோள்கள் மற்றும் தனிப்பட்ட சூழ்நிலைகளுக்குப்பொருந்த, உங்களுக்கான ஒரு தனிநபர் கற்கும் வழிப்பாதையை உருவாக்குவோம்.
- குடியமர்த்தல் மற்றும் பிற ஆதரவுச் சேவைகளிடம் உங்களைப் பரிந்துரைப்போம் மற்றும் உங்களுக்குப் பொருத்தமான AMEP வழிப்பாதைகளுக்குப் பிந்தைய வழிகாட்டுதல்களை வழங்குவோம்.
- நீங்கள் AMEP வகுப்புகளில் கலந்துகொள்ளும் வேளையில் உங்கள் (பள்ளிக்கு செல்லும் வயது இல்லாத) பிள்ளைகளுக்கு கலாச்சாரரீதியாக பொருந்தும் குழந்தை பராமரிப்புச் சேவைகளை இலவசமாக வழங்குவோம்.
- உங்களுடைய AMEP அனுபவத்திலிருந்து நீங்கள் மிகச் சிறந்த பலனை அடைவதற்கு உங்களை ஊக்குவிப்போம்.

## உங்கள் பொறுப்புகள்

ஒரு AMEP வாடிக்கையாளராக உங்களிடம் எதிர்பார்க்கப்படுபவை:

- வகுப்புகளில் தவறாமல் கலந்துகொள்ளுதல், வீட்டுப்பாடங்களை நிறைவு செய்தல் மற்றும் உங்களுடைய கற்கும் திறனுக்கு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.
- ஏதேனும் காரணத்திற்காக உங்களால் வகுப்பில் கலந்துகொள்ள இயலவில்லை எனில், உங்களுடைய AMEP அறிவுரையாளர்களைத் தொடர்பு கொள்ள வேண்டும்.
- நீங்கள் AMEP ஐ விட்டு விலக விரும்பினால் எங்களிடம் தெரிவிக்க வேண்டும்.
- ஆசிரியர்கள், AMEP அறிவுரையாளர்கள், உடன் பயிலும் மாணவர்கள் மற்றும் மற்றவர்களை நியாயமாகவும், மரியாதையுடனும் கலாச்சாரரீதியாக உணர்வுப்பூர்வமாகவும் நடத்த வேண்டும்.
- உங்களுடைய தனிநபர் வழிப்பாதை வழிகாட்டியில் அடையாளம் காட்டப்பட்டுள்ள படிநிலைகளை பின்பற்ற வேண்டும் மற்றும் நீங்கள் ஒரு மாற்றத்தைச் செய்ய விரும்பினால் அதை உங்களின் AMEP அறிவுரையாளருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.
- மாணவர் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க நடந்து கொள்ள வேண்டும்.